Registered as a NewsPaper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 25 | (07 - 04 - 1992) | செவ்வாய்க்கிழமை | ஓசை: 49

## ஆங்கிலத்திற்கு முன் உரிமை வங்கி நிர்வாகிகள் எதிர்ப்பு

மத்திய வங்கியில் உள்ள நிர்வாக அதிகாரிகளைப் பட்டப்பின் படிப்பிற்குத் தெரிவு செய்யும் போது ஆங்கில அறிவுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்ற மத்திய வங்கி ஆளுனரின் முடிவுக்கு மத்திய வங்கி நிர்வாக அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். மேற்படிப்புக்கு என்று தெரிவு செய்யப்பட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு மீளவும் ஒரு ஆங்கில தேர்வுப் பரீட்சையை வைப்பது என்று ஆளுனர் விதந்துரைத்திருப்பது தங்களது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என்று மேற்படி அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இப்போது ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால் முன்பு பொருளியல், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் மேற்படிப் (4 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளை தடை செய்ய கோருவது தமிழரை காட்டிக்கொடுக்கும் செயல்

## எதிர்காலச் சந்ததி தூற்றும் என்கின்றார்கள் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்கள்

(சென்னை)

விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு கோருவது நியாயமற்றதும், மிகப்பெரும் தவறுமாகும். விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கப்படுமானால், எதிர்காலச் சந்ததியினர் காட்டிக் கொடுத்தவர்கள் என்று எம்மைத் திட்டுவதைத் தவிர்க்க முடியாமல் போய்விடும். இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்களான டாக்டர் ராமதாசும், பண்ருட்டி ராமச்சந்திரனும் கருத்துவெளியிட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளை தடைசெய்யவேண்டும் என்று எழுந்துள்ள கோரிக்கைக்கு மத்தியில் ஆனந்த விகடன் சஞ்சிகை பல தரப்பு பிரமுகர்களையும் பேட்டி கண்டு இது குறித்து அவர்களது கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளது. இப்பேட்டியிலேயே டாக்டர் ராமதாசும், பண்ருட்டி ராமச்சந்திரனும் இவ்வாறு கருத்துத் தெரிவித்தனர்.

### மக்கள்கட்சித்தலைவர் டாக்டர் ராம்தாஸ்

ஈழத் தமிழர்கள் தமது விடுதலைக்காக அளப்பரிய தியாகங்களைச் செய்து போரிடும் போது அவர்களுக்கு உணவுப் பொருள், பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் அனுப்புவது எந்த வகையிலும் தவறாகாது. காயம்பட்ட விடுதலைப் புலிகளைப் பராமரிப்பது எந்த வகையிலும் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்காது என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இந்தியாபாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும், ஆபிரிக்க தேசிய காங்கிரசையும் அங்கீகரித்து இருப்பதுடன் அவர்கள் சார்பாக உலகரங்கில் பேசியும் வருகின்றது. யாசிர் அரபாத்தையும் நெல்சன்மண்டேலாவையும் கௌரவிக்கின்றது. இலங்கைத் தமிழர் விவகாரம் இவற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாததாகும் கண்மூடித்தனமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விடுதலைப் புலிகளை தடை செய்ய வேண்டுமெனக் கோருவது எந்த வகையிலும் நியாயமாகாது எனவும் தெரிவித்தார்.

### பண்ருட்டி இராமச்சந்திரன்:

விடுதலைப் புலிகளை இங்கு தடை செய்வது சட்ட பூர்வமாக இயலாததாகும் இந்தியாவின் ஒற்றுமைக்கும் இறைமைக்கும் முரணாக செயற்படும் தல்கல்சா போன்ற இயக்கங்களைப் போன்றதல்ல விடுதலைப் புலிகள் இயக்கம். இவ்வையில் இரு மாணவர்கள் உட்பட பன்னிரண்டு பேர் பொலி

## அகதிகளை இல. அனுப்புவதற்கு ஐ. நா. அதிகாரி ஆட்சேபம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியாவிலிருந்து

பொறுத்த வரை இந்த வழக்கம் பின்பற்றப்படவில்லை என்றார் அவர்.

செயலாளர் சிறில் றணத்துங்க ஆகியோருடன் அகதிகளுக்

## வவுனியா ராணுவத்தால் ஓமந்தை மாணவர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 24ந் திகதி ஓமந்தை மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவராகிய பா. தயாபரன் என்பவர் வீட்டுப் பொருள்கள் வாங்குவதற்கு வவுனியா சென்ற இடத்தில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவரின் தற்போதையநிலை குறித்து தெரியவரவில்லை.

## அன்னை பூபதி நினைவு

பண்டத்தரிப்பு செபமாலை மாதா சனசமூக நிலையத்தினரால் அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவாக அடையாள உண்ணாவிரதம் நடாத்தப்பட்டது

கடந்த சனிக்கிழமை செபமாலை மாதா ஆலய முன்றலில் காலை 8.00 மணிக்கு இவ்வுண்ணா விரதத்தை பண்டத்தரிப்பு பிரதேசப் பொறுப்பாளர் தனம் ஆரம்பித்து வைத்தார். சிறுவர் சிறுமியர் வயோதிபர் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இவ் உண்ணா நோன்பில் கலந்து கொண்டனர்.

## யாழ். கிளிநொச்சி பகுதிகளில் மலேரியா பரவும் அபாயம்

### மருத்துவ அதிகாரிகள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக மலேரியா நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மேற்படி பகுதிகளில் இந்த நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. இந்த நோயின் தாக்கத்தினால் பலர் மரணமடைந்திருக்கின்றனர். நூற்றுக்கணக்கானோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பின்னர் இதுவரை எந்த நோய்த்தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தற்போது மிக வேகமாகப் பரவிவரும் மேற்படி நோயைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பெருந்தொகையான மக்கள் உயிராபத்துக்களைச் சந்திக்க வேண்டி ஏற்படும்என்று பிராந் [ 4ஆம் பக்கம் பார்க்க]

## வேவு பார்த்த சிப்பாய் புலிகளின் வேட்டுக்கு பலி

தெல்லிப்பழையில் விடுதலைப் புலிகளின் காவலரண்களை வேவு பார்த்த இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம்நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவத்தின் சடலம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. இராணுவத்திடமிருந்த இரண்டு ஜே. ஆர். ரக கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# அகதிகளை இல. அனுப்புவதற்கு ஐ. நா. அதிகாரி ஆட்சேபம்

(கொழும்பு)
இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது குறித்து அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதி ஹறிட பேர்க்கான் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

அகதிகளைச் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பும் விஷயத்தில் சர்வதேச நியமங்கள் பிற்பற்றப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படும் அகதிகளை எமது உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசுவது வழக்கம். இது சர்வதேச மட்டத்தில் பின்பற்றப்படும் வழக்கமாகும். இலங்கைத் தமிழ் அகதிகளைப் பொறுத்த வரை இந்த வழக்கம் பின்பற்றப்படவில்லை என்றார் அவர்.

வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரெட்ண. ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் பாதுகாப்புச் செயலாளர் சிறில் றணத்துங்க ஆகியோருடன் அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் இது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 2500 இல. தமிழ் அகதிகளை உடன் அனுப்ப முயற்சி

(சென்னை)
தமிழக அரசு இந்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பதாக 2500 இலங்கை அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்ப உத்தேசித்துள்ளது.

இதற்கமைய இவர்கள் மூன்று பிரிவுகளாக இலங்கைக்கு கொண்டு வரவிருப்பதாக புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் திலக் சந்திரசேகரா தெரிவித்துள்ளார்.

இவர்கள் திருமலை, மன்னார் ஆகிய இடங்களுக்கு வந்துசேர உள்ளார்கள் எனவும் தெரிவித்தார்.

இந்த ஜனவரிமாதம் 22 ஆம்
4ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகளை இங்கு தடை செய்வது சட்ட பூர்வமாக இயலாததாகும் இந்தியாவின் ஒற்றுமைக்கும் இறைமைக்கும் முரணாக செயற்படும் தல்கல்சா போன்ற இயக்கங்களைப் போன்றதல்ல விடுதலைப் புலிகள் இயக்கம். அண்மையில் இரு மாணவர்கள் உட்பட பன்னிரண்டு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். தமிழ் நாட்டை இந்திய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### ராஜு

(யாழ்ப்பாணம்)
கடந்த ஆண்டு 19-3-91 இல் சிலாவத்துறைசிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின் போது வீரவேங்கைராஜு (நவநீதநாதன்-சுரேஸ் குமார் சேச்லேன், சங்கானை) வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த இவ் வீர வேங்கைக்குவிடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

நோயின் தாக்கத்தினால் பலர் மரணமடைந்திருக்கின்றனர். நூற்றுக்கணக்கானோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பின்னர் இதுவரை எந்த நோய்த்தடுப்பு நடவடிக்

## புலிகளின் வேட்டுக்கு பலி

தெல்லிப்பழையில் விடுதலைப் புலிகளின் காவலரண்களை வேவு பார்த்த இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம்நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவத்தின் சடலம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. இராணுவத்திடமிருந்த இரண்டு ஜே. ஆர். ரக கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

# ராணுவ அமைப்பில் ஏற்பட்ட மாற்றம் புதிய யுத்த தந்திரோபாயமாம்

## யுத்தத்தைத் தொடர அரசு அக்கறையாம்

(கொழும்பு)
அண்மைக் காலத்தில் இராணுவ அமைப்பில் உயர்மட்ட கட்டளையிடும் மற்றும் கட்டுப் படுத்தும் முறையில் ஏற்படுத்தப் பட்டுள்ள மாற்றம் புலிகளுக்கு எதிரான போரில் புதிய தந்திரோபாயத்தின் ஒரு பகுதி என நம்பகமாக தெரிய வருவதாக கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகையொன்று தெரிவிக்கிறது.

இராணுவ அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் மூலம் வடக்கு-கிழக்கில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகள் முப்படைகளின் தளபதிகளின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளமை குறித்து நேற்றைய பத்திரிகையில் செய்தி வெளிவந்தது தெரிந்ததே.

இம் மாற்றத்தின்மூலம் முப்படைத் தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் வகுக்கும் போர்முனைத் திட்டங்களில் தேசிய பாதுகாப்புச் சபையின் முன் அனுமதியின்றி எந்த மாற்றமும் செய்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு அனுமதியில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது.

இப்புதிய மாற்றம் குறித்து கருத்து வெளியிட்ட ஒரு இராணுவ அதிகாரி இந்த தந்திரோபாயத்தின் மூலம் தாம் சிறந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மனைவிசுருக்கிட்டு தற்கொலை மகன் வெட்டிக் கொலை

## கணவனின் தற்கொலை முயற்சி தோல்வி

(நமது நிருபர்கள்)
தன் மனைவியின் தற்கொலையைத் தொடர்ந்து கணவன் தனது பிள்ளைகளை வெட்டிக் கொலை செய்துவிட்டுத் தானும் தற்கொலை செய்ய முயற்சித்தபோது அயலவர்களால் அது தடுக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று கொடிகாமம் இயற்றாளைப் பகுதியில் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது பவளராணி (வயது 31) என்ற நான்கு பிள்ளைகளின் தாய் நேற்று நண்பகல்வீட்டின் அருகிலிருந்த வேப்பமரத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் இதனைக்கண்ட கணவன் வீட்டிற்குள் சென்று தனது பிள்ளைகளான தர்சன் (வயது 10) பிரியதர்சினி (வயது 8) பிரசாத் (வயது 5) ஆகியோரைச் சவரக்கத்தியால் துடிக்கத்துடிக்க வெட்டியுள்ளார். கழுத்தில் பாரிய வெட்டுக்குள்ளான தர்சன் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றைய இருவரும் மிகவும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரது நிலையும் கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது உறவினர்கள் அயலவர்களால் இக் கொடூரத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இக் கொலையில் ஈடுபட்ட க சிவபாதம் (வயது 37) என்பவரை தடுத்து நிறுத்த காவல்துறையினரின் உதவி நாடப்பட்டது. இத

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிப்பகுதியில் குண்டுச் சத்தம்

(யாழ்ப்பாணம்)
நேற்று நண்பகல் வேளையில் பூநகரியை அண்டியபகுதிகளில் பலத்த குண்டுச் சத்தங்கள் அடிக்கடி கேட்டவண்ணம் இருந்தன. இதற்கிடையில் சிறிலங்கா விமானப் படையின் வானூர்திகளின் நடமாட்டமும் அதிகமாக இருந்தன. (பா)

## அபிவிருத்தி செய்ய தீர்மானம்

(திருக்கோணமலை)
யாழ். குடாநாட்டிலுள்ள ஐந்து பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதென வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது

புங்குடுதீவு சண்முகானந்தா வித்தியாலயம், கொழும்புத்துறை இந்து ம. வி., கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பலகமம் முகாமிலிருந்து கட்டாயக் குடியேற்றத்திற்கு 10 தமிழ்க் குடும்பங்கள்

(திருக்கோணமலை)
தம்பலகமம் அகதி முகாமிலிருந்து பத்து தமிழ்க் குடும்பங்கள் கட்டாயக் குடியேற்றத்திற்கென சிறிலங்கா இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

பாலம்போட்டாறில் அமைக்கப்பட்டுள்ள குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்துவதற்கென இவர்கள் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இக் குடியேற்றத் திட்டத்தில் ஏற்கனவே 70 சதவீத சிங்களவரும் 25 சதவீத முஸ்லிம்களும் குடியேற்றப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 5 சத வீதத்திற்குத் தமிழரைக் குடியேற்றப்போவதாக அரச அதிகாரிகள் தெரிவித்து வந்தனர்.

ஆனால் சிங்களவர் மத்தியில் குடியிருப்பதற்கு தமிழர்கள் அச்சம் தெரிவித்து வந்ததால் இவர்கள் பலாத்காரமாக இழுத்துச் செல்லப்பட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகச்சுடர் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)
சண்டிலிப்பாய் வட்டவைப் பிரிவில் இன்று தியாகச் சுடர் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக்கூட்டமும் மாதகல் சென் தோமஸ் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அடையாள உண்ணாவிரதம் காலை 8-00மணி தொடக்கம் மாலை 4-00 மணிவரை நடைபெறும் பிற்பகல் 7-00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகும். இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில்சுகுணா, வாஞ்சிநாதன், ஸ்ரனிஸ் மாஸ்டர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

# உடுகம்பொலவின் மனைவி அரசியல் தஞ்சம் கோருகிறார்

(கொழும்பு)
முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொலவின் நான்கு பிள்ளைகளும், மனைவியும் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

திருமதி உடுகம்பொல அமெரிக்காவில் சிறிலங்கா தூதுவராலயத்தில் கடமைபுரிகிறார். உடுகம்பொல குடும்பத்துக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டதா, இல்லையா என்பது இதுவரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. ஆனால் இவர் தமது விசாவை மேலும் நீடிப்பதற்குச் செய்து கொண்ட விண்ணப்பம் அமெரிக்க நிர்வாகத்தால் முன்னர் நிராகரிக்கப்பட்டது.

உடுகம்பொலவின் பிள்ளைகள் இருவர் மேரிலான்ட் பால்டிமோர் பல்கலைக் கழகக் கல்லூரியில் மருத்துவமும், பொறியியலும் படிக்கின்றனர் மற்றப் பிள்ளைகள் இருவரும் அமெரிக்காவில் கல்லூரி மட்டத்தில் படிக்கின்றனர்

இதேவேளை உடுகம்பொல இப்போது தலைமறைவு வாழ்க்கை நடத்திவருகிறார் லியனாராச்சி கொலைவழக்கு விசாரணையில் தான் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன் ஆஜராகப் போவதாக உடுகம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**தவறி விட்டது**

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த பாலசிங்கம் துரைசிங்கம் என்பவரின் அடையாள அட்டை சனிக்கிழமை (4-4 92)அன்று ஊரியானுக்கும் இயக்கச்சிக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் என்ற விலாசத்தில் அல்லது ஈழநாதக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2423)

# ஜே. வி. பிக்கு உதவியதாக இராணுவ அதிகாரிமீதுபுகார்

ஜே. வி. பியின் மத்திய குழு உறுப்பினர் ஒருவரோடு தொடர்பு கொண்டு அவருக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இராணுவ அதிகாரி ஒருவர் அவிசாவலை நீதிபதி முன் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

ஜே. வி. பியின் மத்தியகுழு உறுப்பினர் எனச் சொல்லப்படும் சோமவன்ச அமரசிங்க என்பவரும் அவருடன் சேர்ந்த சுமார் இருநூறு பேரும் தென்னிந்தியாவுக்கு தப்பிச் செல்வதற்கு இராணுவகப்டனான தர்மசிறி நிசங்க என்பவர் உதவியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# சிறிலங்கா ஓட்டவீரனை இராணுவம் தாக்கியது

சிறிலங்காவின் குறுந்தூர அதிவேக ஓட்டக்காரர் சிறியந்தா திஸாநாயக்கா சுகததாஸா ஸ்ரேடியத்தில் நடந்த விளையாட்டுப் போட்டியின் பின் இராணுவத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களால் தாக்கப்பட்டார்.

முகத்திலும், மார்பிலும், கைகளிலும் பலமாகத் தாக்கப்பட்ட சிறியந்தா நவலோக்கா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

ஸ்ரேடியத்துக்கு வெளியில் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் வைத்துத் தாக்கப்பட்ட இவர் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூஸ், இராணுவத் தளபதி சசில் வைத்தியரட்ணாமற்றும் கிறான்ட்பாஸ் பொலிஸ்நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார். முன்னாள் இராணுவ வீரரான இவர் இப்போது சிலிங்கோ நிறுவனத்தில் தொழில்புரிந்து வருகிறார்.

சிறியந்தா தெற்காசிய விளையாட்டுப் போட்டி ஏசியன் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 100 மீற்றர் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாமுவேல்ஹனிமன் பிறந்ததினம்

ஹோமியோபதி வைத்தியத்தை உலகிற்கு அறிமுகஞ் செய்த டாக்டர் சாமுவேல ஹனிமனின் பிறந்த தினம் இம் மாதம் பத்தாம் திகதி சாயி ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் கொண்டாடப்படவுள்ளது

இவ் வைபவத்தில் ஹோமியோபதி வைத்தியத்தின் சிறப்பு பற்றி டாக்டர் தி பரமசிவம் உரையாற்றவுள்ளார்.



**1 ஆம் ஆண்டு நினைவலைகள்**

# லெப்டினனட் சோமன்

**(விநாயகமூர்த்தி இராசேந்திரன்)**

| தமிழீழ மண்ணில் சேயாக | சிலாவத்துறை மண்ணில் விதையாக |
| --- | --- |
| 02-11-1975 | 20-03-1991 |

திதி: 07-04-1992

செந்தமிழ் மண்ணைச் சிறுநரி யாள்வதா<br>
சீறிப் படைகண்டான் - இவன்<br>
பைந்தமிழ் காத்திட புலியுடனிணைந்தான்<br>
புதுமைகள் பலதுவித்தான் - சோமன்<br>
சிந்தனை வென்று சிலாவத் துறைப்படை<br>
சீறிட சினந்து நின்றான் - அங்கு<br>
வந்தனை யுடனே இல சிபம் காக்க<br>
விதையென தனை யீந்தான்.

சோமனுடன் சிலாவத்துறைச் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 81 வேங்கைகளையும் மலர்தூவி அஞ்சலிக்கின்றோம் இன்று எமதில்லத்தில் நடைபெறும் முதலாண்டுத் திதி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நண்பர்கள், உறவினர்கள், போராளிகள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

கல்வயல்,<br>
சாவகச்சேரி.

சோமன் குடும்பத்தினர்.

(2421)

**களனி ரயர் கம்பனி ஊழியரை**

# வேலைக்கு உடன் திரும்ப பிரதமர் வேண்டுகோள்

(கொழும்பு)

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள களனி ரயர் கம்பனி ஊழியர்கள் அனைவரையும் உடனடியாக வேலைக்கு திரும்பும்படி, பிரதமரும், தொழில், தொழில் பயிற்சி அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார். களனி ரயர் கம்பனியில் புதிய நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்களுடன் பேச்சு நடத்திய பின்னர் டி. பி. விஜயதுங்கா இவ் வேண்டுகோளை விடுத்தார்.

# வவுனியாவில் பாஸ் இன்றி நடமாடுவோர் கைது

(கொழும்பு)

வவுனியா நகருக்குள் பாஸ் இல்லாமல் நடமாடும் எவரும் கைது செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படையினரின் கட்டுப் பாட்டிற்குட்பட்டிருக்கும்கிராமங்களில்வசிப்போரும் பாஸ் பெற வேண்டுமென்றும் படையினரால் வழங்கப்படும் 'பாஸ்' மூலம் தம்மை அடையாளம் காட்டத் தவறும் எவரும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப் படுவார்கள்என்றும்நேற்றுமுன் தினம் வவுனியாவில் ஒலிபரப்பிகள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**கடவுச்சீட்டு**

## உரிய ஆவணங்களுடன் வந்தால் 4 தினங்களில் கிடைக்கும்

கடவுச்சீட்டுக்களுக்கான விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப் பட்டால் நான்கு தினங்களுக்குள் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய வகையில் கடவுச்சீட்டு விநியோக அலுவலக வேலைகள் சீரமைக்கப்பட்டிருப்பதாகவும், மேலதிகமாக ரூபா ஐந்நூறு செலுத்தினால் ஒரே நாளில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

# முல்லை மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

முல்லைத்தீவு மாவட்டத்தில் 97 பாடசாலைகளில் 27,000 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். இவர்களில் சுமார் 3000பேர் இடம்பெயர்ந்த மாணவர்களாவர். எனவே குறைந்தது 1100 ஆசிரியர்களின் சேவை தேவையாகும். ஆனால் இம்மாவட்டத்தில் சுமார் 700 ஆசிரியர்களே சேவையில் உள்ளனர் இன்னும் 400 ஆசிரியர்களேனும் நியமிக்கப்படல் வேண்டும். இடம்பெயர்ந்த மாணவர்கள் கூடுதலாக மு/உடையார்கட்டு அ.த. கபரீடசாலை மு/வள்ளிபுனம் அ.த.க பாடசாலை மு/விசுவமடு அ.த.க பாடசாலை மு/ புதுக்குடியிருப்பு றோ.க த.க. பாடசாலை மு/புதுக்குடியிருப்பு சி.சி.த.க பாடசாலை மு/அம்பலவன் பொக்கணை அ.த.க பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயில்கின்றனர் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும்படி வடக்கு கிழக்கு மாகாணச் செயலாளரை முல்லை பிரதேசக் கல்விப்பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் - இலங்கை

**விஞ்ஞான பீட முதலாவது அரையாண்டுப் பரீட்சை - 1991.**

மேற் கூறப்பட்ட பரீட்சைகள் கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் ஆரம்பமாகும் முதலாவது அரையாண்டு முதலாம்வருடப்பரீட்சை 20-04-92, முதலாவது அரையாண்டு இரண்டாம் வருடப்பரீட்சை 27-04-92 முதலாவது அரையாண்டு மூன்றாம்வருடப்பரீட்சை 02-05-92.

பதிவாளர்.

(4232)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



**ஓராண்டு நினைவஞ்சலி**

| வீர ஜனனம் | | வீரச் சாவு |
| --- | --- | --- |
| 24 |  | 07 |
| — | | — |
| 04 | | 04 |
| — | | — |
| 1976 | | 1991 |

**1-ம் ஆண்டுநினைவலைகள்**



# நினைவு கூருகின்றோம்.

**1992.04.07**

1985ம் ஆண்டு இதே தினத்தில் கனகராயன் குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். அசோக்** (சரவணமுத்து வன்னியசிங்கம் - சேமமடு, வவுனியா)

1986-ம் ஆண்டு மட்டக்களப்பு, நொச்சி முனைப் பகுதியில், சிறிலங்கா புலனாய்வுப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய சூட்டி / தூர்த்தி (தம்பிப்பிள்ளை கருணாகரன் நொச்சிமுனை மட்டக்களப்பு)

1991-ம் ஆண்டு புலுட்டை மானோடையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

வடிவேலு நடராசா
(ராஜன்)
இறப்பு: 08-03-1992

மாத மொன்று
போனதடா
மறவனே உனைப்
பிரிந்து
மறவோம் உன்
நினைவை
மண்ணில் நாம்
வாழும் வரை.

களபூமி, உறவினர்
காரைநகர். (சி/4228)

---



1970 1991

## வீரவேங்கை மைக்கல்
### (அன்ரனி ஜெபநேசன் ஜீவநாயகம்)

தமிழ் மண்ணை மீட்டெடுக்க
உன் உயிரையே அர்ப்பணித்தாய்
தமிழீழம் மலர்ந்திடவே
தன்மானம் காக்கப் புறப்பட்டாய்

ஆனையிறவினிலே சமர் புரிந்த வீரனே சரித்திர மாகிவிட்ட தமிழ் மகனே நிலத்தையே அந்நியன் அழிக்க வந்த போது அவன் குலத்தையே அழிக்கப் புறப்பட்ட கோமகனே உன் பணி நாம் தொடர்வோம்.

குடும்பத்தினர், நண்பர்கள். பங்குத் தந்தை
மிருசுவில் வடக்கு, மிருசுவில்,
(2415)

---

ஓம் சாயி ராம்

## திருமண அழைப்பு

| மணமகன் | மணமகள் |
|---|---|
| **தயாபரன்**<br>(இளைமுகாமையாளர், பூநகரி ப. நோ. கூ. சங்கம் ஜெயபுரம்) | **விவேகானந்தலட்சுமி** |

**காலம் 08 - 04 - 1992 புதன்கிழமை**

பிற்பகல் 4.56 மணிமுதல் 6.08 மணிவரையுள்ள சுபவேளையில் பகவான் திருவருளால் ஜெயபுரத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் உறவினர்களையும் நண்பர்களையும் குடும்பசமேதராய் வருகைதந்து மணக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

( இருவீட்டார் அழைப்பு )

தங்கள் நல்வரவை நாடும்

| மணமகன் பெற்றோர் : | மணமகள் பெற்றோர் ; |
|---|---|
| **திரு. பொ. தங்கராசாவும் துணைவியாரும்**<br>(இளைப்பாறிய பிரதேசசபை உத்தியோகத்தர், தலைவர் செஞ்சிலுவைச் சங்கம் பூநகரி) | **திரு. வ. அரியரத்தினமும் துணைவியாரும்**<br>(அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் பூநகரி) |

ஜெயபுரம், பூநகரி (சி/4105)

---



## வீரவேங்கை தங்கச்சி
### (முருகையா நிமலகாந்தன்)

வீரப்பிறப்பு : 03 - 06 - 1970 வீரச்சாவு : 19 - 04 - 1991

**விம்மித் தணிகின்றோம்!**

விதையாகிப் புதைந்தவனை
விண்வெளியில் கலந்தவனை
விடைகாண முடியாத
வினாவாகி மறைந்தவனை

வெட்டிப் பறித்தெடுத்த
விந்தைமிகு விதிக்கணையை
எட்டி உதைப்பதற்கு
இங்கு ஒரு ஆளில்லை

வேதனை வெம்மையிலே
விம்மித் தணிகின்றோம்
எம்மோடிருக்கின்றான்
இனியவன் தங்கச்சி!

ஆருயிர் நண்பர்கள்

இவரின் இல்லத்தில் 07-04-92 இன்று திவசக் கிரியைகள் நடைபெறவிருப்பதால் அனைத்துப் பேரராளிகளையும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

திருச்சபை அளவெட்டி
தெற்கு, அளவெட்டி [சி/4231]

---

மட்டக்களப்பு )
1991-ம் ஆண்டு புலுட்டை மானோடையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**தனு / பானு** ( கல்லடி, மட்டக்களப்பு )
**தேவிராஜ்** ( ஈச்சந்தீவு )
**நவேந்திரன் / சதா**
குப்பிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**ஞானம்** ( மணியம் வீரசிங்கம் - மாவடிச்சேனை, வெருகல்.)

**சுபன்** ( கணபதிப்பிள்ளை குவேந்திரராசா - ஆலங்கேணி, திருக்கோணமலை )
மட்டக்களப்பு, வாகரைப்பகுதியில், எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த-

**2-ம லெப். மது** ( சின்னத்தம்பி சுரேன் - பாண்டிருப்பு கல்முனை, அம்பாறை )
அம்பாறை, சின்னவத்தைப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் மினிமுகாம் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**கப்டன் சங்கர்** (முருகேசு நடேஸ் - முனைத்தீவு பெரியபோரதீவு, மட்டக்களப்பு)

**ஆனந்தகுமார்** ( சோமசுந்தரம் மகாலிங்கம் - முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)
ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**மைக்கல்** ( அன்ரனி ஜெபநேசன் ஜீவ நாயகம் மிருசுவில் வடக்கு. )
வானாறில், சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**ஈஸ்வரன்** ( அருளானந்தன் ஈஸ்வரதாஸ் - கிளிவெட்டி, மூதூர், திருக்கோணமலை. )
மட்டக்களப்பு தாண்டியடிப்பகுதியில், சிறிலங்கா இராணுவம், மற்றும், தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2 - ம் லெப் - கிருபா** (செல்லத்தம்பு இராமச்சந்திரன் - புதூர், மட்டக்களப்பு )

**கேசவன்** ( மூர்த்தி - புதூர், மட்டக்களப்பு )
மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட களுவங்கேணியைச் சேர்ந்த தமிழ்க் கடற்றொழிலாளி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-4227)

# சிங்களப் படையின் வலிந்த தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்தோம்

## - தளபதி பால்ராஜ்

"கடந்த வருடத்தில் இராணுவம் மணலாற்றில் 'மின்னல் வேகம்' என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது அப்போது அனுபவரீதியாக காட்டுப் போரில் எதிரியின் இராணுவ நகர்வுகளையும் தாக்குதல் முறைகளையும் நன்கு கற்றறிந்து கொண்டோம்.

இந்த அனுபவங்களைக் கொண்டு எதிரியை முறியடிப்பதற்கேற்ற புதிய யுத்த தந்திரோபாயங்களுடனும், புதிய கள உத்திகளுடனும் கடந்த மாதம் இராணுவம் மணலாற்றில் மேற்கொண்ட 'கஜபார' இராணுவ நடவடிக்கையை நாம் எதிர் கொண்டோம். எதிரியின் வலிந்த தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்தோம்.

இராணுவத்தின் மீது நடாத்தப்பட்ட அதிரடித் தாக்குதலினால் ஒரு பின்னுதைப் பற்ற பீரங்கி உட்பட கனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 50இற்கும் மேற்பட்ட படையினர் பலியாகினர். 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்" என பால்ராஜ் தெரிவித்தார். அவர் மேலும் தொடர்கையில்...

இராணுவ நடவடிக்கை 'கஜபார' மிகவும் வலிமை மிக்க தொன்றாகும். இத்தாக்குதல் நடவடிக்கையின் போது எமது வீரர்களினால் கனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. எதிரியின் கவச வாகனங்கள் தகர்த்தெறியப்பட்டன. எம்மால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் இராணுவம் திணறி நிலை குலைந்தது" என்றார்.

'கஜபார' இராணுவ நடவடிக்கை பற்றி தளபதி சொர்ணம் கருத்துத் தெரிவிக்கையில் இராணுவ நடவடிக்கை கஜபாரஎதிரியினால் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதாகும் இந் நடவடிக்கையின் போது இராணுவம் மூன்று அணிகளாக நகர ஆரம்பித்தது. நடு அணி கனரக ஆயுதங்களுடனும், கவச வாகனங்களுடனும் நகர்ந்தது. மற்றைய இரு அணிகளும் பாதுகாப்பாக நகர்ந்தன.

எமது வீரர்கள் இவற்றை நிதானமாக அவதானித்தனர். எமது ஒரு பகுதி வீரர்கள் பாதுகாப்பாக வந்த இரண்டு அணிகள் மீது தாக்குதலை தொடுத்தனர். மற்றைய வீரர்கள். நடுவே வந்த அணியை ஊடறுத்து தாக்குதல் நடாத்தினர்.

ஒரு சந்தர்ப்பத்தில் கைகலப்புச் செய்யக் கூடியளவு அண்மையில் தாக்குதல் நடைபெற்றது.'' என குறிப்பிட்டார்.

மேற்படி இராணுவ நடவடிக்கையின் போது காயமடைந்த ஒரு போராளியை சந்தித்தோம் அவர்......

''எமது சொந்த மண்ணில் ஒரு பிடி மண்ணைக்கூட அந்நியனுக்கு அடிமைப்பட நாம் விட்டு விடமாட்டோம் என்ற உறுதியுடன்தான் 'கஜபார' இராணுவ நடவடிக்கையை நாம் ஒவ்வொருவரும் எதிர் கொண்டோம்'' என்று கூறினார்.

இந்நடவடிக்கையின் போது துணைப்படை வீரர்கள் போராளிகளுக்கு முழுமையாக துணை நின்றனர். களப்பணிகளில் இருந்து காயமடைந்த போராளிகளை தூக்கி வருவது வரை உறுதுணையாய் இருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இராணுவ நடவடிக்கைகளை எதிர்கொள்ள மக்கள் படிப்படியாக அணிதிரண்டு வருகின்றனர். இவ்வகையில் மணலாற்று மக்கள் ஒவ்வொருவருமே தமது மண்ணை காக்க உறுதியுடன் செயற்பட்டு வருகின்றனர்:

நன்றி: விழிப்பு
06-04-1992



கஜபார நடவடிக்கையை முறியடிக்கச் செல்லும் மகளிர் படையணி



'கஜபார' இராணுவ நடவடிக்கையை எதிர்கொள்வது குறித்து தளபதி பால்ராஜ், தளபதி சொர்ணம் ஆலோசனையிடுகின்றனர்.



''கஜபார நடவடிக்கை''யின் போது காயமடைந்த போராளிகள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர்.

### இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் நோக்கம்

மணலாறு மாவட்டம் வடதமிழீழத்தையும் -தென் தமிழீழத்தையும் இணைக்கும் எமது பாரம்பரியத் தாயகப் பகுதியாகும். கேந்திர முக்கியத்துவமுடையது. மேலும் வளம் நிறைந்த பிரதேசமாகும். இராணுவ நடவடிக்கை மூலம் இப் பிரதேசத்தை கைப்பற்றி சிங்களக் குடியேற்றங்களை நிகழ்த்தி வட-தென் தமிழீழப் பகுதிகட்கு இடையேயான தொடர்பை துண்டித்தலே சிங்கள அரசின் நீண்டகால நோக்கமாகும்.

இதற்காகவே இராணுவம் மணலாற்றில் தொடர்ந்து தாக்குதல்கள் மேற்கொண்டுவருகின்றது.

---

### சிந்தனைக்கு

அசட்டுத் துணிச்சல் ஒரு சிலருக்கு வெற்றியையும், மிகப் பலருக்குத் துன்பத்தையும் தேடித் தரும்.
— ஃபீட்ரஸ்


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 07-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ எண் 65


## பங்காளிகளுக்கிடையில் சிறிலங்காவின் மோதல்

'ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்ப்பவர்களைக் கொல்வதற்கென்றே கரும் பூனைகள் என்னும் கொலைகாரப்படையை ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் உருவாக்கி இருந்தார்கள் இவர்களால் கொல்லப்பட்ட சுதந்திரக்கட்சியையும், ஏனைய இடதுசாரி குழுக்களைச் சேர்ந்த 156 பேருடைய பட்டியலும், தகவல்களும் என்னிடம் உள்ளன இது தொடர்பாக விசாரணை செய்ய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஓர் விசாரணைக் கமிசன் நியமிக்க வேண்டும் எனத் தற்பொழுது தலைமறைவாகியுள்ளவரும், முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான உடுகம்பொல தெரிவித்தார்.

நீண்ட காலமாகவே சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரியான உடுகம்பொலவின் இவ் அறிக்கையானது பெரும் அரசியல் நெருக்கடியை பிரேமதாசா அரசாங்கத்திற்கு ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்கள் சிறிலங்காவின் மனித உரிமைகள் விடையத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கையில் உடுகம்பொலவின் அறிக்கை வந்துள்ளது இவ் அறிக்கை பெரிதும் சிக்கல்களை ஏற்படுத்தக் கூடியதாகும் இதேவேளை சிறிலங்காவின் எதிர்கட்சிகளுக்கு பெரும் மகிழ்ச்சி ஊட்டும் விடயமாகும்.

கடந்த மாத இறுதியில் இதே பகுதியில் உடுகம்பொலவும், பிரேமதாசா அரசாங்கமும் பற்றி எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் உடுகம்பொலவை சட்டத்தின் முன் கொண்டுவர சிறிலங்கா ஆட்சித்தலைவரில் இருந்து அடிமட்ட அரசியல்வாதிகள் வரை விரும்பப் போவதில்லை ஏனெனில் உடுகம்பொல சட்டத்தின் முன் வரும்போது தனியாக அவருடன் தொடர்புடையதாகக் கூறப்படும் படுகொலைகள் மட்டும் வெளிவரப் போவதில்லை இதில் எய்தவன் யார் அடிபட்டவன் யார் போன்ற விடயங்களும் வெளிவரும் இதில் உடுகம்பொலவைவிட நட்டமடைபவர்கள் பெரும் அரசியல் தலைவர்களாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை எனக் குறிப்பிட்டிருந்தோம்.

---

லிபியாவுக்கு எதிரான

யார் போன்ற விடயங்களும் வெளிவரும் இதில் உடுகம்பொலவைவிட நட்டமடைபவர்கள் பெரும் அரசியல் தலைவர்களாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை எனக் குறிப்பிட்டிருந்தோம்.

இதை தற்பொழுது வெளிக்காட்டுவது போல் உடுகம்பொலவின் அறிக்கை வெளிவந்துள்ளது. அதிலும் இவ் அறிக்கையின் விசேட அம்சம் என்னவென்றால் சுதந்திரக்கட்சி, இடதுசாரி கட்சிகளின் 156 ஆதரவாளர்கள் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையாகும். ஜே. வி. பி. காலத்தில் படுகொலை செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களின் எண்ணிக்கை 60, 000 - 100,000 வரை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், 156 பேரின் அதுவும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் தொடர்புடையவர்கள் பிரச்சினையை உடுகம்பொல வெளியிடுவது பிரச்சினையை அரசியல் மயமாக்கி பிரேமதாசாவிற்கு நெருக்கடியைக் கொடுப்பதற்கே என்பதில் எதுவித சந்தேகமுமே இருப்பதற்கில்லை.

ஆனால் உடுகம்பொல விடுத்துள்ள அறிக்கையானது, பிரமேதாஸா அரசிற்கு விடுக்கப்பட்ட முதலாவது எச்சரிக்கை என்றே கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் உடுகம்பொல ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் சர்ச்சைக்குரிய முக்கிய பொறுப்புக்களை வகித்தவர். ஜே.வி.பியை அடக்கியதில் இருந்து கசினோ மன்னன் ஜோ சிம்மை நாடு கடத்தியதில் இருந்து பெரும் அரசியல் சர்ச்சைக்குரிய விவகாரங்கள் வரை உடுகம்பொல கையாண்டவராகும். இதனால் உடுகம் பொலவின் கையில் பல இரகசியங்கள் இருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் படத்தேவையில்லை இந்நிலையில் உடுகம்பொல மீது நெருக்குதல்கள் தொடர்ந்து அதிகரிக்குமானால், பிரேமதாசா அரசு குறித்து மேலும் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவரலாம் அவை சிலவேளை இதுவரை எதிர்க்கட்சிகள் ஊகிக்க முடியாத அளவினதான பெரிதாகவும் இருக்கலாம்.

தற்பொழுது ஆட்சியாளருக்கும்-உடுகம்பொலவிற்கும் ஏற்பட்டுள்ள சண்டையானது பங்காளிகள் சண்டையாகும்; இலங்கையில் நடந்த கொலைகளுக்கு கூட்டாகப் பொறுப்பு ஏற்கவேண்டிய சிறிலங்கா அரசாங்கம் உடுகம்பொலமீது அதாவது பங்காளி மீது பழியைப் போடும் போது பங்காளி ஆத்திரமடைந்து ஒரு பகுதி உண்மையினைத் தற்பொழுது வெளியிட்டுள்ளார். பங்காளியின் ஆத்திரத்தை அரசாங்கம் மேலும் கிளறுமேயானால் பல விடயங்கள் வெளிவரலாம். ஆனால், உடுகம்பொல தற்பொழுது வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றே எதிர்கட்சிகள் அரசாங்கத்திற்குப் போதிய தலையிடியைக் கொடுப்பதற்கும் பிரச்சினைகளைக் கிளறுவதற்கும் போதுமானதாகும்.

# ஈரானின் தூதுவரகங்கள்மீது ஐரோப்பாவில் தாக்குதல்கள்

(டில்லி)

தெற்கு ஈராக்கிலுள்ள தங்களது தளங்களை ஈரானிய விமானங்கள் தாக்குதல் தொடுத்தமையினை கண்டிக்கும் முகமாக முஜாகிதீன் கெரில்லாக்கள் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் இருக்கும் ஈரானின் தூதுவரகங்களை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.

ஜேர்மனியின் தலைநகர் பேர்ளினிலுள்ள ஈரானிய தூதுவரகத்தினுள் புகுந்த ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே நடந்த கலவரத்தில் பலர் காயமுற்றனர். காயமுற்றவர்களில் ஜேர்மன் பொலிசாரும் ஆர்ப்பாட்டக்காரர்களும் அடங்குவர். தூதுவரகக்கட்டடத்தின் ஒரு பகுதியும் தீப்பிடித்து சேதமாகியது.

ஹேகிக் நகரிலுள்ள ஈரானிய தூதுவரகக் கட்டடத்தில் முஜாகிதீன் கிளர்ச்சியாளர்கள் இரும்புச் சலாகைகளை சுழற்றியபடி உள்ளே புகுந்து தாக்குதல் நிகழ்த்தியுள்ளனர்

சுவிட்சர்லாந்து இங்கிலாந்து பிரான்ஸ் மற்றும் சுவீடனிலும் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்திருப்பதாக செய்திகள் கிடைத்துள்ளன.

முன்னதாக தெற்கு ஈராக்கிலுள்ள முஜாகிதீன் கெரில்லாக்களின் தளங்கள் மீது எட்டு ஈரானிய விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதல் நடத்திய போது ஈராக்கினால் ஒரு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதுடன் இரண்டு விமான ஊழியர்களும் சிறைப் பிடிக்கப்பட்டது தெரிந்ததே.

மேற்கு ஈரானிலுள்ள இரு கிராமங்கள் மீது முஜாகிதீன்கள் கடந்த சனியன்று தாக்குதல் நடத்தியமையை அடுத்தே விமானத்தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரானிய உத்தியோகபூர்வசெய்தித் தாபனம் அறிவித்துள்ளது.

## லிபியாவுக்கு எதிரான ஐ. நா. தீர்மானத்திற்கு 45அரபு நாடுகள் கண்டனம்

(கெய்ரோ)

லிபியாவுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை விதித்திருக்கும் தடைகளை நாற்பத்தியைந்து நாடுகளைக்கொண்ட இஸ்லாமிய மாநாட்டுத் தாபனம் குறை கூறியுள்ளது.

இஸ்லாமிய மாநாட்டுத் தாபனத்தின் தலைமைச் செயலாளர் இதுபற்றிக் கூறுகையில் பான்-எம் விமானக் குண்டு வெடிப்பு வழக்கில் லிபியா ஒத்துழைக்க தயாராக இருந்தமையை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை புறக்கணித்து விட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

## சாயும் கோபுரம் மேலும் சரிவு

இத்தாலியில் புகழ் பெற்ற பைஸா கோபுரத்தை சரிய விடாது தடுக்கும் நடவடிக்கைகளை தொழிலாளர்கள் இன்னும் இரண்டு வாரங்களில் ஆரம்பிக்க உள்ளனர்.

187 அடி உயரம் கொண்ட பைஸா கோபுரம் இத்தாலி வரும் உல்லாசப் பயணிகளை வெகுவாகக் கவர்ந்து வந்தது கோபுரம் 16.5 அடிவரை சரிந்துள்ளது. இச்சரிவைத் தடுப்பதற்கு உருக்கிலான ஐந்து வளையங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

1990 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பைஸா கோபுரத்தை மக்கள் பார்வையிடுவது தடுக்கப்பட்டதனால் டஸ்கன் நகருக்கு பெரும் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

## பிரிட்டன் பொதுத் தேர்தல்
### பாகிஸ்தான் தலையிடுவதாக புகார்

(லண்டன்)

பிரிட்டனின் பொதுத் தேர்தலில் பாகிஸ்தானின் பிரிட்டனுக்கான தூதுவர் தலையிடுவதாக தொழிற்கட்சி குற்றம் சாட்டியுள்ளது இது பற்றி பிரிட்டன் வெளியுறவு அமைச்சகத்திடம் எதிர்க்கட்சியான தொழிற்கட்சி புகார் தெரிவித்துள்ளது.

பிரிட்டனிலுள்ள பாகிஸ்தானியர்கள் பாகிஸ்தான் வம்சாவழியினரான நோரி கட்சி வேட்பாளர் ஒருவரை ஆதரிக்க வேண்டுமென பாகிஸ்தானுக்கான தூதுவர் குமாயும் கான் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தொழிற்கட்சி தனது புகாரில் கூறியுள்ளது.

இவ் விடயம் பற்றி ஏற்கனவே பாகிஸ்தான் தூதுவருக்கும், பாகிஸ்தான் அரசுக்கும் தெரிவிக்கப்பட்டிருப்பதாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

## ரயில் விபத்து

(சென்னை)

ஆந்திரப் பிரதேசத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ரயில் விபத்து ஒன்றில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதுடன் பதின்மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர் பீட்டகுண்டா-விஜயவாடா பயணிகள் ரயில் வண்டி, குண்டூர் அருகே நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் ஒன்றின் மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்ததாக ரயில்வேப் பகுதி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தேசிய ஒருமைப்பாட்டு சபை இன்று அயோத்தி விஜயம்

(டில்லி)

தேசிய ஒருமைப்பாட்டு சபையின் உறுப்பினர்கள் அயோத்தியாவில் ராம ஜென்ம பூமி - பாபர் மசூதி வளாகத்திற்கு மட்டுமே செல்ல வேண்டும் என்று கட்டுப்படுத்த முடியாதென இந்திய மத்திய அரசு கூறியுள்ளது.

இதுபற்றி உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் மேலும் கூறுகையில் தேசிய ஒருமைப்பாட்டு சபை உறுப்பினர்கள் எந்த மதஸ்தலத்திற்கும் செல்வதை மத்திய அரசு தடுக்க முடியாதெனவும் குறிப்பிட்டார்.

தேசிய ஒருமைப்பாட்டு சபையின் உறுப்பினர்களும், பாராளுமன்ற பிரதிநிதிக் குழுவினரும் இன்று அயோத்திக்கு செல்வதற்கு திட்டமிட்டுள்ளனர்

இந்தக் குழுவினர் ராம ஜென்ம பூமி - பாபர் மசூதி வளாகத்திற்கு மட்டுமே விஜயம் செய்ய வேண்டுமென உத்தரப் பிரதேச மாநில முதல்வர் கல்யாண்சிங் வலியுறுத்தியிருப்பது தெரிந்ததே.

சமீபத்தில் குண்டுவெடிப்பினால் சேதமுற்ற இன்னுமொரு மசூதிக்கு இக் குழுவினர் விஜயம் செய்வது அரசியல் சாசன உணர்வுக்கும் ஒருமைப்பாட்டுணர்வுக்கும் முரண்பாடானதாக இருக்குமென பிரதமர் நரசிம்மராவுக்கும், உள்துறை அமைச்சர் சவானுக்கும் தனித்தனியே எழுதியுள்ள கடிதத்தில் உ. பி. முதல்வர் கல்யாண்சிங் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாதம்

பாலியல் நாட்டமுள்ள

# உல்லாசப்பயணிகள்வருகை; ஆசியாவில பாரியபிரச்சினை

[பாங்கொக்]

பாலியல் நாட்டமுள்ள உல்லாசப்பயணிகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக ஆசிய நாடுகளிலுள்ள ஆயிரக்கணக்கானசிறுவர்கள் விபசாரத்துக்கும் நிர்வாண சித்திரங்களுக்குதோற்றுவதற்கும் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள் என அண்மையில் பாங்கொக்கில் நடைபெற்ற சமூக சேவையாளர்களின் சர்வதேச மாநாடொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவாரமாக நடைபெற்ற மாநாட்டின் இறுதி நாள் அன்று இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் 'இது மனித குலத்துக்கு எதிரான குற்றச்செயல்' என வர்ணிக்கப்பட்டுள்ளதுடன் இம் மாநாட்டில் இலங்கை உட்பட சுமார் 26 நாடுகளின் 170 சமூக சேவையாளர் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் பல்வேறு ஆலோசனைகளும் இவ் அறிக்கையில் வெளியிடடபட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இலங்கை, தாய்வான் ஆகியவை சிறுவர், விபசாரத்தில் பெரும் பிரச்சினையை எதிர்நோக்குவதாக கத்தோலிக்க குருவானவரான டெஸ்மண்ட் டிசூஸா தெரிவித்துள்ளார்

மேலும் பாலியல் கேளிக்கை விடுமுறைக்காக ஆசியாவரும் உல்லாச பிரயாணிகள் தங்கள் இப்போக்கை மாற்றிக் கொள்ள ஆலோசனை பெற வேண்டும் என மாநாட்டு அறிக்கையில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் பங்கு பற்றியோர் சிறுவர் தொடர்பான ஐ.நா.உரிமைகள் சாசனத்தை அங்கீகரிக்கும்படி ஆசிய அரசாங்கங்களை கோரியுள்ளதுடன்தாய்லாந்தில் 15 வயதுக் தொகை ஐம்பதினாயிரத்துக்கும் எண்பதினாயிரத்துக்கும் இடைப்பட்டிருக்கும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறுவர்கள் எய்ட்ஸ் ஆபத்து இல்லாதவர்கள் என்ற நம்பிக்கை காரணமாகவே அவர்கள் விபசாரத்திற்கு கூடுதலாக நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என தாய்லாந்து அமைச்சர் ஒருவர் இம் மாநாட்டில் கருத்துக் கூறியுள்ளார்.

எனவே இவ் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட சில விடயங்கள் தேசியரீதியாக தீர்க்கப்படமுடியாதவையாகையினால் சர்வதேச ஒத்துழைப்பு தேவை என இம்மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

---

விடுதலைப்

விலிருந்து பிரிக்க முயற்சிசெய்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இத்தகைய நடவடிக்கைகளோடு தொடர்புடையவர்கள் என்பது நிருபிக்கப்பட்டால், அவர்களைத் தடை செய்வது சாத்தியமாக இருக்கலாம். பிரிவினைவாதம் மக்களின் ஆதரவு இல்லாமல் வளர முடியாது தமிழ்நாட்டில் இது ஒருபோதும் சாத்தியமாகப் போவதில்லை. தமிழ்நாடு அரசு தமிழகத்திலுள்ள தமிழர்களின் நலன்களை மட்டுமன்றி உலகெங்குமுள்ள தமிழர்களின் நலன்களையும் பேண வேண்டியுள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பான வழிமுறையொன்றைக் காணாமல் விடுதலைப் புலிகளைத்தடைசெய்யுமாறுகோருவது மிகப் பெரும் தவறாகவே இருக்கும் இது நடைபெற்றால் எதிர்காலச் சந்ததிகாட்டிக்கொடுத்தவர்கள் என்றுஎம்மைத் திட்டுவதைத் தவிர்க்க முடியாதுஎன்றார்.

ப. நெடுமாறன்

பிரபாகரனும், விடுதலைப் புலிகளும் சி.பி. ஐயினால் குற்றஞ் சாட்டப் படுகின்றனர். ஆனால் இது நீதி மன்றத்தில் நிருபிக்கப்பட வேண்டும். நீதி மன்றம் இந்த விசாரணையில் தனதுதீர்ப்பைக் கூறவேண்டும். இவையனைத்திற்கும் பின்னர் தீர்மானிக்கப் பட முடியும். ஆனால் சி.பி ஐ விசாரணை விடுதலைப் புலிகளை நோக்கித் திரும்பியதும் முதலமைச்சரும் அவரது சகாக்களும் குற்றவாளிகளே அவர்கள்தான் என்று தீர்ப்புக்கூற முனைவது ஏற்கப்பட முடியாதது ஆகும். நீதிமன்றத்தின் சுதந்திரமான விசாரணைகள் கூட இத்தகைய அறிவிப்புக்களால் பாதிப்படையலாம். மகாத்மாகாந்தி கொலையில் வீரசவார்கார் மீது சி.பி ஐ குற்றம் சாட்டியது. ஆனால் அரசியல் நோக்கத்தோடு சுமத்தப்பட்ட இக் குற்றச்சாட்டை நீதி மன்றம் நிராகரித்தது நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பை வெளியிட முன்பே விடுதலைப் புலிகளை தடை செய்தே தீருவோம் என்று கூறுவது ஜனநாயக நெறிமுறைக்கு ஒவ்வாதது இந்திய அரசாங்கம் அந்நிய நாட்டில் செயற்படும் ஒரு அமைப்பை எங்ஙனம் தடை செய்ய முடியும்? அவ்வாறு தடை செய்வது மக்களின் கவனத்தைதிசைதிருப்புவதாகவே அமையும்.

மோகன்தாஸ்

முன்னாள் பொலிஸ் அதிகாரி

இது ஒரு சரியான முடிவாக இருக்காது இந்தத்தடை அறிவிக்கப்பட்டால் இதனை வெற்றிகரமாக அமுல்படுத்த முடியாது இதற்குப் பல காரணங்களையும், விடுதலைப் புலிகளையும் வேறு படுத்திப் பார்ப்பது சிரமமானதாக இருக்கும். கடந்த ஒன்பது ஆண்டு காலத்தில் விடுதலைப் புலிகள் தமிழகத்தில் நன்கு பழகியுள்ளனர். உள்ளூர் மக்களுடன் புலிகள் இரண்டறக் கலந்து விட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது மிகக் கடினமானதாகி விடும். தடை செய்வதால் ஒரு எதிர் மறையான விளைவைத்தான்எதிர்நோக்க வேண்டி வரும். சட்டத்தின் மூலம் மதுவைத் தடுக்கலாம். ஆனால் அதை முழு அளவில் நடைமுறைப்படுத்த முடியாதது போலவே இதுவும் இருக்கும்.

இதேவேளை, ஆனந்தவிகடன் பேட்டி கண்ட துக்ளக் ஆசிரியர் சோ, ம. பொ சிவஞானம், வாழப்பாடி இராமமூர்த்தி ஆகியோர் புலிகள் தடை செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். இவர்கள் மூவரும் ஆரம்பம் தொட்டே விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்குடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

2500 இல.

திகதியில் இருந்து இலங்கை அரசாங்கம் 13616 அகதிகளை இலங்கைக்கு கொண்டு வந்திருக்கிறது. இன்னமும்தமிழகத்தில் 95 000 அகதிகள் உள்ளனர். இந்த வருட முடிவுக்குள்

---

# மலையகமக்கள்பலமடைவதை இனவாதிகள் விரும்பவில்லை

-தொண்டமான்

மலையகமக்கள் அரசியல் ரீதியாக ஒருசக்தியாக வளர்ந்துவிடக் கூடாது என்பதில் இனவாத சக்திகள் அக்கறையுடன் செயற்படுகின்றன என அமைச்சர் தொண்டமான் கொழும்பு பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி யொன்றில் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களுக்கு எதிராக மோசமான பிரசாரங்கள் பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் கொண்டு நடத்தப் படுகின்றன. இந்த இனவாத சக்திகளுக்கு சில பத்திரிகைகளும் துணைபோகின்றன என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

தோட்ட மக்களுக்கு தொண்டமான் பெற்றுக் கொடுக்கக் கூடியவற்றை எல்லாம் பெற்றுக் கொடுத்துள்ளர் அவர் எதைக் கேட்டாலும் அரசாங்கம் கொடுத்து விடுகிறது மலையகத்தில் அவர் அரசனைப்போல் செயல்படுகிறார் என்றெல்லாம் பிரசாரப்படுத்துகின்றனர்.

கடந்த பலதசாப்தங்களாக உரிமைகளற்று ஒதுக்கப்பட்டிருந்த மக்கள் இன்று படிப்படியாக உரிமைபெற்று வரும் பொழுது அதற்கெதிராக இவ் வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதை யார்தான் பார்த்துக்கொண்டிருக்க முடியும்?

மலையக மக்கள் தொடர்ந்தும் உரிமைகளற்ற நிலையிலேயே வாழவேண்டும் என்ற நியதியில்லை அவர்களும் இந் நாட்டுப் பிரஜைகள் அவர்களுக்கும் ஏனைய மக்களைப் போன்று உரிமைகளை அனுபவிக்க உரிமையுண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

மலையக இளைஞர்கள் கைது தொடர்பாக தெரிவிக்கையில் முதலில் ஊவாப்பகுதியையும் அதனைத்தொடர்ந்து மலையகத்தையும் குழப்பிவிட சில சக்திகள் முயல்கின்றன. இது பற்றி ஜனாதிபதியின் நேரடிக் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து இன்று ஊவ வில் அமைதி நிலவுகின்றது இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இவ் விடயம் தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே பிரசாரப் படுத்தியிருந்தால் நிலைமை வேறு விதமாகப் போயிருக்கும் அப்படியிருந்தும் இது தொடர்பாக மோசமான பிசாரம் மேற்கொள்ளப்பட்டது.

ஏனையோர் பிடிபட்டால் ஏதும் கதைக்க முடியாது மலையகத்தவர்கள் பிடிபட்டால் தொண்டமான் தலையிட்டு விடுகிறார் என கூறுகின்றனர் என்று அமைச்சர் தொண்டமான் அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

---

## ஏயர்லங்கா விமானத்தில் கரப்பான் பூச்சி பயணம்

ஏயர் லங்கா விமானத்தில் கரப்பான் பூச்சிகள் ஓடித்திரிவதாக விமானமோட்டி முறைப்பாடு செய்துள்ளார்

பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி இலக்கம் யு. எல். 584 சேவை விமானத்தில் முதலாம் வகுப்பில் கரப்பான் பூச்சிகள் ஓடித்திரிந்ததைத் தான் அவதானித்ததாக விமானமோட்டி கப்டன் கூப்மான் ஏயர் லங்கா நிர்வாகத்திடம் எழுத்தில் முறைப்பாடு கொடுத்துள்ளார்.

தனது 35 வருடகால சேவையில் இப்படியான ஒரு சம்பவத்தைத்தான் ஒரு போதும் கண்டதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் கரப்பான் பூச்சிகளை விமானத்தில் கண்டால் சுகாதார அதிகாரிகள் கடும் நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிவிக்கும் அவர் இந்த விமானத்தை ஐரோப்பிய சேவையில் ஈடுபடுத்தும் முன் விமானத்துக்குக் கிருமிநாசினி தெளிக்கும் படியும் கேட்டுள்ளார்.

---

யாழ். கிளிநொச்சி

திய சுகாதார சேவைகள்

---

ராணுவ

பலனைப் பெறமுடியும் என்றார்.

கடந்த மாதங்களில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்புகளும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சிசில் வைத்தியரட்ண வடபகுதிக்கு அனுப்பிய குழுக்களின் அறிக்கையுமே இந்த புதிய மாற்றங்களுக்கு காரணம் எனதெரிவிக்கப்படுகிறது

வடபகுதி நிலைபற்றி மதிப்பீடு செய்யவும் முன்னணி இராணுவத்தின் நிலைபற்றி கணிப்பீடு செய்யவும் அனுப்பப்பட்ட இக்குழுக்கள் கண்டறிந்த உண்மைகள் சிறிலங்கா அரசிற்கு உவப்பானதாக இல்லை என தெரியவருகிறது.

---

## புலிகள் மீதான தடைபற்றி முடிவு இல்லை

(டில்லி)

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடை விதிப்பது பற்றி எதுவித முடிவும் இது வரை எடுக்கப் படவில்லை. உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் இதனைத் தெரிவித்தார்.

ராஷ்டிரபதி பவனில் நேற்று காலை செய்தியாளரிடம் பேசும் போது அவர் இத் தகவலை வெளியிட்டார்.

---

## மூவருக்கு கத்திக் குத்து; குடும்பத்தகராறு காரணம்

குடும்பத்தகராறு காரணமாக ஏற்பட்ட கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான கைகலப்பை சமரசம் செய்ய முயற்சித்த மூவர் கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்திருக்கின்றனர்.

மேற்படி சம்பவம் நேற்று மாலை கோண்டாவிலில் இடம் பெற்றது இச்சம்பவத்தில் எஸ் கனகலிங்கம் (வயது 53) குணரத்தினம் [வயது 17] என். வெள்ளைத்தம்பி [வயது 65] ஆகியோர் கத்திக்குத்துக்கு இலக்காகி பலத்த காயமடைந்திருக்கின்றனர். இதைவிட தாக்குதல் நடாத்தியதால் காஞ்சனா (வயது 19) என்பவர் மயக்கமடைந்திருக்கின்றார் இவர்கள் அனைவரும் தற்பொழுது யாழ். போதனா மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

---

## சர்வமத தூதுக்குழு யாழ். வருகைதர விருப்பம்

(கொழும்பு)

சகலமதங்களின் நல்லெண்ண தூதுக்குழுவொன்று விரைவில் யாழ்ப்பாணம் செல்ல திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன இவ்வாறான குழு யாழ். செல்லத் தேவையான ஒழுங்குகளை செய்து தருமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

சிலாபம் ஆயர் வண பிராங் மார்க்கஸ் பெர்னாண்டோ தலைமையில் அண்மையில் யாழ். வந்த கத்தோலிக்க நல்லெண்ண தூதுக் குழுவிடம் புலிகள் இது குறித்து தமது நிலைப்பாட்டை விளக்கியதை அடுத்தே சகல மத தூதுக்குழுவொன்று யாழ். வர விருப்பம் தெரிவித்துள்ளது என தெரிகிறது.

---

கட்டாய

குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் மீளக் குடியமர்த்தல் என்ற பெயரில் தம்பலகமம் அகதி முகாமில் இருந்த தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டு வரண்ட வெளிகளிலேயே குடியமர்த்தப் பட்டுள்ளனர். இவர்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை.

---

அபிவிருத்தி

அங்கீகாரிக்குப்படி ஆசிய அர சாங்கங்களை கோரியுள்ளது டன்தாய்லாந்தில் 15 வயதுக் குட பட்டவிபசாரசிறுவர்களின்

மனறம் இந்த விசாரணையில் தனதுதீர்ப்பைக் கூறவேண்டும். இவையனைத்திற்கும் பின்னர் தான் குற்றவாளி யாரென்பது

விக்கப்பட்டால் இதனை வெற்றி கரமாக அமுல்படுத்த முடியாது இதற்குப் பல கார ணங்கள் உண்டு. தமிழ் அகதி


# இலங்கை வங்கி தமிழ்ப் புத்தாண்டு
# பண்டிகைக்கால வெகுமதியாக
# சேமிப்புச் சான்றிதழ்களுக்கு
# அதிகரித்த வட்டியை வழங்குகின்றது

**காலம்: 06-04-1992 முதல் 30-06-1992 வரை மட்டும்**

நீங்கள் செலுத்த வேண்டிய தொகை

| சேமிப்புச் சான்றிதழின் பெறுமதி | 6 மாத முதிர்வுக்கு | 12 மாத முதிர்வுக்கு | 24 மாத முதிர்வுக்கு |
|---|---|---|---|
| ரூபா 200 | 186/- | 172/- | 149/- |
| ரூபா 500 | 466/- | 431/- | 373/- |
| ரூபா 1000 | 932/- | 862/- | 746/- |
| ரூபா 5000 | 4662/- | 4310/- | 3731/- |
| ரூபா 10,000 | 9324/- | 8621/- | 7463/- |
| ரூபா 25.000 | 23310/- | 21552/- | 18657/- |

உங்கள் அன்பிற்குரியோருக்கு புத்தாண்டுப் பரிசாக
இலங்கை வங்கி சேமிப்புச் சான்றிதழ்களைக்
கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்யுங்கள்

## இதோ! இன்னுமோர் அரிய வாய்ப்பு!!

இலங்கை வங்கியின் உத்தரவாதத்துடன்
உங்கள் முதலீடுகள் பல்கிப் பெருகிட

## 'சீ பாங் யூனிட் ரஸ்ட்'

பங்குகளில் முதலீடு செய்யுங்கள்

## விபரங்களுக்கு முந்துங்கள்

# இலங்கை வங்கி

**கிளைகளை நாடுங்கள்!** (சி/4233)


ருக்கிறது. இன்னமும் தமிழகத் தில் 95 000 அகதிகள் உள்ள னர். இந்த வருட முடிவுக்குள் அவர்களையும் இலங்கைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மனைவி

னைத் தொடர்ந்து இவர் தன் உடலையும் சவரக்கத்தியால் வெட்டி தற்கொலை செய்ய முயற்சித்த போது அது தடுக் கப்பட்டதால் தலையில் மண் ணெண்ணையை ஊற்றி தன் னைத்தானே தீமூட்டிக் கொண்டார் இதன்போது இவர் ஏனையோரால் மடக்கிப் பிடிக்கப்பட்டு தீ அணைக்கப் பட்டபின் பலத்த வெட்டு, எரிகாயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் போது இவரது மூத்த மகன் [வயது 12] மயிரிழை யில் தப்பி ஓடிவிட்டார். இக் கொடூரச்சம்பவம் தொடர் பாக தமிழீழ காவல் துறையி னர் புலன் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். இக் கொலைகளுக்கான காரணம் இதுவரை மர்மமாகவேயுள் ளது. (ச க பா)

### யாழ். கிளிநொச்சி

திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மலேரியாத் தடுப்புப் பிரிவு மருத்துவ அதி காரிகள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர்.

நாட்டின் அனைத்துப் பிர தேசங்களிலும் மூன்று மாதங் களுக்கு ஒரு தடவை மலேரி யாத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வழக் கம்.

ஆனால் மேற்படி இரு மாவட்டங்களிலும் இந்த தடுப்பு நடவடிக்கைகள் நீண்ட காலமாக மேற்கொள்ளப்படா மையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் கூறப்படுகி றது.

யாழ். மாவட்டத்தில் மட் டும் ஒரு தடவை மலேரியா நோய்த்தடுப்பு நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு சுமார் 30,000 கிலோகிராம் மலத்தியோன் தேவைப்படுவ தாக கூறப்படுகிறது.

ஆனால் இம்மருந்துப் பொருள்களை எடுத்து வருவ தற்கு சிறிலங்கா கூட்டுப்படை களின் தலைமை அலுவலகம் அனுமதி வழங்க தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்துவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

றிந்த உண்மைகள் சிறிலங்கா அரசிற்கு உவப்பானதாக இல்லை என தெரியவருகிறது.

இதேவேளை புலிகளின் மையப்பகுதியான யாழ்ப்பா ணத்தைக் கைப்பற்றுவதற் காக கடற் பிராந்தியத்தைப் பலப்படுத்தவும் சிறிலங்கா அரசு தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முழுநாட்டை யும் இராணுவத்தினரின் பின் னால் அணி திரட்டினாலன்றி யாழ்ப்பாணத்தைக் கைப் பற்றுவது இலகுவாக அடை யக்கூடிய இலக்கு அல்ல என வும் இதற்கு புதிய தந்திரோ பாயம் வகுக்கப்பட வேண்டும் எனவும் இராணுவ வட்டாரங் களில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த மாற்றங் களுடன் யுத்தத்தை தீவிரப் படுத்த அரசாங்கம்முடிவு செய் துள்ளது என்றும் ஒரு சில வாரங்களில் இராணுவ நடவ டிக்கைகளில் மாற்றங்கள் ஏற் படும் எனவும் அந்தப் பத்திரி கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

களும் செய்து கொடுக்கப்பட வில்லை.

### அபிவிருத்தி

களே அபிவிருத்தி செய்யப்பட வுள்ளன.

இத்தகவலை வடக்கு - கிழ க்கு மாகாண கல்வி அமைச் சின் செயலாளர் தெரிவித் துள்ளார்.

### ஆங்கிலத்திற்கு

புக்குத் தெரிவு செய்யும் போது ஒரே தரத்தில் வைத் துக் கணிக்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவிக்கின்ற னர்.

### உடுகம்பொல

பொல கொழும்பில் ஒரு பத் திரிகைக்குத் தெரிவித்தார்.

லியனாராச்சி கொலை வழக்குத் தொடர்பாகத் தேடப் படும் இவர் பதவியி லிருந்து ஓய்வு பெற்றதும் தலைமறைவாகி விட்டார். இவரைத் தேடி ஒரு விசேட புலனாய்வுப் பிரிவு தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளது

## மேதினப் போட்டிகள்

எதிர்வரும் தொழிலாளர் தினமான மேதினத்தை முன்னிட்டு தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பிரிவான பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் தலை மையில் பின்வரும் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளன.

1. பனையேறல்
2. குட்டான் இழைத்தல்
3. கிடுகு பின்னல்

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 11 - 4 - 92 இற்குமுன் அயலிலுள்ள தெ. ப. பொ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.

வெற்றி பெறுவோர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

பனை தென்னை வள
(4230) அபிவிருத்தி ஒன்றியம்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம்
### முத்தையா தணிகாசலம்

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆவரங் காலை வதிவிடமாகக் கொண்டவருமான பொன்னம் பலம் முத்தையா தணிகாசலம் 06-04 92 அன்று கால மானார். இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் ரஞ் சிதராணி, பானுமதி, அனுஷியா, காந்திமதி, மனோ சுரி, ஸ்ரீஸ்கந்தராசா, முருகானந்தம், சக்திவேல் ஆகி யோரின் அன்புத் தந்தையும் குமாரகுலசிங்கம், சிற்றம் பலம், தயானந்தன், துரைராஜசிங்கம், கலாவல்லி ஆகி யோரதுமாமனாருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 07-04-92 இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் ஆவரங்கால் குடும்ப மயானத்தில் நடை பெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இத்தக வலை ஏற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்
(2426) த. ஸ்ரீஸ்கந்தராசா (மகன்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம் பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.